அளவுக்கு நாடு ஏற்றுக்கொள்ளும் என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். புகை பிடிக்க வேண்டாம் என்று சொன்னதற்காக ஒரு காவலரை வாய்க்கு வந்தபடி பேசுகிற நிலையிலேதான் காங்கிரஸ் கட்சி, சில உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, இங்கே விவகாரம் செய்யுங்கள் என்று அனுப்பியிருக்கிறார்கள்போல இருக்கிறது. அந்தக் கட்சிக்கே இது நன்றாக இருந்தால் சரிதான். திரு. வேடியப்பன்.

3. கவன ஈர்ப்பு-தொடர்ச்சி.

(ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து-தொடர்ச்சி

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து ஒரு நாளைக்கு ஏறத்தாழ 75,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இதிலே குறிப்பாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, அதிக அளவில் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டு, அதிக அளவில் பால் உற்பத்திச் செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே இதற்கு முன்னாலே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தாலும் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசின் சார்பில் போளூரில், இதனை தேசிய பால் வள வாரியத்தின் மூலமாகவோ அல்லது ஊரக வளர்ச்சி முகமை மூலமாகவோ, எப்படியோ ஒரு திட்டத்தில் அமைக்க இதயதெய்வம் அவர்களின் அரசு சார்பில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.20

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கை ஆய்வில் இருக்கிறது. ஆய்வுக்குப் பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

ஊராட்சிகள் சட்ட முன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்," எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 17–கல்வி.

(ஆ) கோரிக்கை எண் 51–தமிழ் வளர்ச்சி–பண்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994–95 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 17–கல்வி. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.1992,20,00,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்,"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1518, திரு. வே. தம்புசாமி.